REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55830

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மார்கழி 27உ புதன் (11—1—56) ★ ★ வெளியூர்: மார்கழி 28உ வியாழன் (12—1—56) [இதழ் 180

தொழில் நிர்வாகத்தில் தொழிலாளருக்குப் பங்கு

ஆமதாபாத், ஜன. 10—

தொழில் நிர்வாகத்தில் தொழிலாளருக்குப் பங்கு அளிக்கும் 'பரீட்சை' இங்கு மற்றொரு பஞ்சாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பெயர் அறிவிக்கப்படாத ஒரு ஆலையில் ஏற்கனவே இம்முறை பரீட்சிக்கப்படுகிறது.

மகேஸ்வரி ஆலையில் இப்போது தொழிலாளர் பங்கு பெறப் போகின்றனர் என்றும், ஆமதாபாத் தொழிலாளர் சங்கமே இதற்கு வழிகாட்டும் என்றும் கூறப்படுகிறது.

பம்பாய் மந்திரிக்கு கருப்புக்கொடி, செருப்பு தோரண வரவேற்பு

சம்யுக்த மராட்டியத்தைவிட பண்டித நேருவே பெரியவர் என்றாராம்

'மராட்டிய விரோதிகள் ஒழிக' என நூற்றுக்கணக்கானோர் ஒலிமுழக்கம்

பூனா, ஜன. 10—

வழிநெடுகச் செருப்புக்களைத் தோரணமாகக் கட்டிய 'வரவேற்பு வளைவுகள்'!

நூற்றுக்கணக்கான தொண்டர்கள், வழி நெடுகிலும் ஏந்தி நின்ற கருப்புக் கொடிகள்!

'சம்யுக்த மராட்டிய விரோதிகள் ஒழிக,' 'சம்யுக்த மராட்டியம் வாழ்க'—என்ற ஒலி வானைப் பிளக்கும் ஒலி முழக்கங்கள்!

இவைகள்தான் பம்பாய் மாகிலப் பொது மராமத்து இலாகா மந்திரியான எம். எம். நாயக் நிம்பல்கார் என்பார், இங்கிருந்து ஐந்து மைல் தொலைவில் உள்ள ஹடாஸ்பர் எனும் ஊரில், பள்ளி ஒன்றைத் திறப்பதற்காகச் சென்றபோது அவரை வரவேற்றன.

'பண்டித நேரு வேண்டுமா—அல்லது சம்யுக்த மராட்டியம் வேண்டுமா' என்று எங்களைக்கேட்டால், நாங்கள், 'பண்டித நேருவே வேண்டுமென்று தயங்காமல் கூறுவோம்'—என்று, வேறு இரு மந்திரிகளுடன் சேர்ந்து, இந்த மந்திரியும் இரண்டு நாட்களுக்கு முன்பு அறிக்கை வெளியிட்டதை எதிர்த்துத்தான் இந்த ஆர்ப்பாட்டத்தை அவருக்கு எதிராக ம. சோ. கட்சியினர் ஏற்பாடு செய்திருந்தனர் என்று கூறப்படுகிறது.

பின்னர் பள்ளிக் கட்டிடத்தைத் திறந்துவைத்துப் பேசிய நிம்பல்கார், தான் இந்தக் கருப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தினால், 'சம்யுக்த மராட்டியம்' பற்றிய தனது கொள்கை நிலையை மாற்றிக்கொள்ளப்போவதில்லை—என்று கூறினாராம்!

கம்யூனிஸ்டுகள் மீதுள்ள தடை

நீக்குவதற்கு பர்மா சர்க்கார்ஒப்பம்

ரங்கூன், ஜன. 10—

"சர்க்காருக்கு விரோதமான தாக உள்ள ஆயுதப் புரட்சியைக் கைவிட்டால், கம்யூனிஸ்டுக் கட்சி மீதுள்ள தடையை நீக்க சர்க்கார் தயார்"

என்று, பர்மிய பிரதமர் யூ-நூ தெரிவித்திருக்கிறார்.

போரை நிறுத்தி சர்க்காருடன் சமரசம் செய்துகொள்ள விரும்புவதாக பர்மா மந்திரிகளுக்குத் தனிப்பட்டமுறையில் கம்யூனிஸ்டுத் தலைவர்கள் தெரிவித்திருப்பதாக வெளிவந்த செய்தியை பர்மியப் பிரதமர் உறுதி செய்தார்.

மராட்டிய சட்டசபை உறுப்பினர்கள் பதவியிலிருந்து விலக வேண்டும்!

இன்றேல், 'சமூக ஒதுக்கல்' செய்யப்படுவர்!

தோழர் ஆத்ரே எச்சரிக்கை

பெல்காம், ஜன. 9—

பம்பாயைத் தலைநகராகக் கொண்ட சம்யுக்த மராட்டியம் அமைவது நிராகரிக்கப்படுமானால் அப்போது, மராட்டிய சட்டசபை உறுப்பினர்கள் எல்லாம் தங்கள் பதவிகளைவிட்டு விலக வேண்டும்; இன்றேல், அவர்கள் பலவந்தமாகப் பதவியிலிருந்து துரத்தப்படுவார்கள்.

"சம்யுக்த மராட்டியக் கோரிக்கையை ஏற்காதவர்கள் சமூக 'பகிஷ்காரத்'திற்கு ஆளாக்கப்படுவார்கள்.

"மராட்டிய மக்கள் அமைதியான முறையில் தங்கள் கோரிக்கைக்காகப் போராட்டம் நடத்துவார்கள்"

என்று, தோழர் பி. கே. ஆத்ரே என்பார் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசகையில் குறிப்பிட்டிருக்கிறார்,

'வேண்டுமானால் மீண்டும் தேர்தல் நடத்தட்டும்'

'மக்களின் முடிவுப்படி நடக்க வடநாட்டவர் தயாரா?'

திரு-கொச்சி தமிழ்ப் பகுதிகள் இணைப்பு குறித்து துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன்

சென்னை, ஜன. 11—

"பணிக்கரின் தீர்மானத்தை வைத்தே தமிழர்களுக்கு சேர வேண்டிய திரு—கொச்சி தமிழ்ப் பகுதிகள் இல்லையென்று கூறப்படுமானால்.........உத்திரப் பிரதேசத்தை துண்டாட வேண்டுமென்று பணிக்கர் கூறியுள்ளாரே—ஏன் பணிக்கர் கூறியபடி உத்திரப் பிரதேசத்தை நேருவும், அவரது சகாக்களும் துண்டாடவில்லை?

"சர்தார் பணிக்கரானாலும், வேறு எவரானாலும், தமிழர்களின் நலனில்—நெறியில்—நல்வாழ்வில் யார் குறுக்கிட்டாலும் நாங்கள் தட்டித்தான் கேட்போம்; தமிழ்ப் பகுதிகளை ஒரு இம்மியளவும் கொடுத்துவிட்டுத் தமிழர்கள் வாளாவிருக்க மாட்டார்கள்,"

என்று, தி. மு. க. துணைப் பொதுச்செயலாளர், திரு என். வி. நடராசன் அவர்கள், 8—1—56ல், சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்ற தமிழ்ப் பகுதிகள் இணைப்புக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசியபோது குறிப்பிட்டதாவது:—

"சென்னையில் சென்ற மாதம் எல்லாக் கட்சியினரும் சேர்ந்த—கோகலே மண்டபத்தில் நடைபெற்ற 'மாகில சீரமைப்பு'க் கூட்டத்தில் நம்முடைய எண்ணத்தைத் தெரிவித்தோம். ஆனால், டெல்லி பீடத்திலுள்ளவர்கள் நமது கோரிக்கைகளை மதிக்கவில்லை என்பது, பத்திரிகைச்செய்திகள் மூலம் தெரியவருகிறது.

"திருவனந்தபுரம் தலைவர்கள் டெல்லிக்குச் சென்று தமிழகப் பகுதிகள் தங்களுக்கே வேண்டுமென வற்புறுத்தியிருக்கிறார்கள்;

(4-ம் பக்கம் பார்க்க)

அமெரிக்க உதவி

6 கோடி டாலர்வரை கிடைக்குமாம்

புதுடில்லி, ஜன. 10—

அமெரிக்கா, இந்தியாவிற்குப் பொருளாதார உதவியாக 5 கோடி டாலர் ஒதுக்கி இருப்பதாக இந்தியாவில் உள்ள அமெரிக்கத் தூதவர் ஜான் ஷெர்மன் கூப்பர் அறிவித்திருக்கிறார்.

இத்தொகையில், தொழில் நுட்ப உதவித் திட்டத்தின்கீழ் இந்தியாவிற்குக் கிடைக்கவிருக்கிற ஒரு கோடி டாலர் சேரவில்லை என்றும், அதையும் சேர்த்தால் மொத்த உதவி 6 கோடி டாலர் (ரூ. 30 கோடி) என்றும் அமெரிக்க அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார்.

'கோலார் அல்லது பெல்லாரி ஆந்திரருக்கு வேண்டும்'

சஞ்சீவ ரெட்டி கோரிக்கை

கர்னூல், ஜன. 9—

"நமக்கு பெல்லாரியோ, அல்லது கோலாரோ தரப்படாவிட்டால், 'கிளர்ச்சிகளுக்கு நாங்கள் இரையாகமாட்டோம்' என்ற தலைவர்களின் உறுதிமொழிக்கும் மாறாக, கிளர்ச்சிகளினால்தான் கோரிக்கைகளைப் பெறமுடியும் என்ற முடிவிற்குத்தான் நாம் வர வேண்டியிருக்கும்,"

என்று ஆந்திர துணை முதல் மந்திரியான என். சஞ்சீவரெட்டி தெரிவித்திருக்கிறார்.

"பின்னர், 'நாம் கிளர்ச்சியில் ஈடுபடாமலிருந்துவிட்டோமே' என்று ஆந்திரர் வருந்த நேரிடும்.

"நிர்வாக வசதிதான் முக்கியம் என்று கருதப்படுமானால் பெல்லாரி எங்களுக்குத் தரப்பட வேண்டும். மொழிவழி அமைப்புத்தான் முக்கியம் என்று கூறப்படுமானால், கோலார் ஆந்திரத்திற்குக் 'கிடைக்கவேண்டும்,"

என்றும் அவர் கூறினாராம்.

சஞ்சீவ ரெட்டி காங்கிரஸ் மேலிடத்தவரைச் சந்திப்பதற்காக டில்லி புறப்படுமுன், பத்திரிகையாளரிடம் பேசுகையிலேயே இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

சமூகநல வசதிகளுக்கு ரூ. 946 கோடி

இரண்டாம் திட்டத்தில் ஒதுக்கப்படுகிறது

புதுடில்லி, ஜன. 9—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சமூகநல வசதிகளுக்காக ரூ. 946 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இதில் கல்விக்கு ரூ. 320 கோடி, சுகாதாரம் ரூ. 267 கோடி, குடியிருப்பு வசதி ரூ. 120 கோடி, பின்தங்கிய வகுப்பினர் நலனுக்கு ரூ. 90 கோடி; புதுவாழ்வு தருவதற்கு ரூ. 90 கோடி, சமூகக்ஷேம நலத்திற்கு ரூ. 28 கோடி, தொழிலாளர் நலனுக்கு ரூ. 26 கோடி, படித்த வேலையில்லாதோர் நலனுக்காகத் தயாரிக்கப்படும் திட்டங்களுக்காக ரூ. 5 கோடி—என்று பிரித்து ஒதுக்கப்பட்டுள்ளதாம், இந்தத் தொகை!

இரண்டாம் திட்ட முடிவில் 11 வயதுக்குக் குறைவான குழந்தைகளில் 60 சதவிகிதம் பேருக்கும், 11 முதல் 14 வயது வரை உள்ளவர்களில் 19 சதவிகிதம் பேருக்கும், 14 முதல் 17 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு 10 சதவிகிதம் பேருக்கும் கல்வி வசதிகள் கிடைக்குமாம்.

தொழில் நுணுக்கப்பயிற்சி

புதுடில்லி, ஜன. 10—

தொழில் நுணுக்கப் பயிற்சி பெறுவோர் தொகையை அதிகரிப்பதற்காக இரண்டாம் திட்டத்தில் மிகத் தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும், தொழிலாளர், பயிற்சி இவற்றிற்காக ஒதுக்கப்படும் ரூ. 26 கோடித் தொகை கொண்டு, தேவைப்படுகிற அளவு தொழில் நுணுக்கப் பயிற்சி அளிக்கப் பயிற்சி நிலையங்கள் தோற்றுவிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

இப்போது மத்திய சர்க்கார் நிர்வகித்து வரும் தொழில் நுணுக்கப் பயிற்சி நிலையங்கள், இனி மாகில சர்க்கார் நிர்வாகத்திற்கு மாற்றப்படும் என்றும், அவை ஆண்டுதோறும், 10,000 பேருக்கு மட்டுமே பயிற்சி தருவதாயும், இரண்டாம் திட்ட காலத்தில் மேலும் ஆண்டொன்றுக்கு 20,000 பேருக்குப் பயிற்சி அளிக்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் கூறப்படுகிறது.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 11—1—'56 புதன்

அதுவே போதும்!

'ஒரு இஸ்லாமியக் குடியரசாக பாகிஸ்தான் மலரும்; 300 உறுப்பினர்கள் கொண்ட மக்கள்சபை அமையும்; மந்திரி சபை இந்த மக்கள் சபைக்கு கூட்டாகக் கட்டுப்பட்டு விளங்கும்; மேற்கு பாகிஸ்தான், கிழக்கு பாகிஸ்தான் ஆகிய நாட்டின் இரு பகுதிகளுக்கும் மக்கள் சபையில் சரிபாதி இடம் கிடைக்கும்; முகம்மதிய வேதப் புத்தகமான குரானுக்குப் புறம்பான சட்டங்கள் எதுவும் இயற்றக் கூடாது; முஸ்லிம் அல்லாத ஒருவர் நாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட முடியாது; எல்லா மக்களுக்கும் சம அந்தஸ்து, சம உரிமைகள், ஒத்த வாய்ப்புகள் இருக்கும்; இதர முஸ்லிம் நாடுகளுடன் ஒன்றி வாழவேண்டும்; பாகிஸ்தான் தொடர்ந்து காமன்வெல்த் அமைப்பில் அங்கம் வகிக்கவேண்டும்; இன்னும் இருபது ஆண்டுகளுக்கு ஆங்கிலமே தொடர்ந்து ஆட்சி மொழியாக இருக்கவேண்டும்' என்பன போன்ற பல முக்கியமான அம்சங்களை உள்ளடக்கி, பாகிஸ்தானத்திற்கென ஒரு நகல் அரசியல் சட்டம் தயாரிக்கப்பட்டு, புதிய அரசியல் நிர்ணய சபையினல் விவாதிக்கப்பட்டு வருகிறது.

இதற்குமுன், கடந்த எட்டரை ஆண்டுகளில், இப்படி ஒரு அரசியல் சட்டம் தயாரித்து அரசியல் நிர்ணய சபையின் அங்கீகாரத்தைப் பெற்று அமுல் செய்யவேண்டும் என்பதற்காக மூன்று முறை முயற்சிக்கப்பட்டது; அவை எல்லாம், பாகிஸ்தான் அரசியல்வாதிகளிடை காணப்படும் பல வகைப் பிளவுகளின் காரணமாக வெற்றிபெற முடியாது மாய்ந்தொழிந்தன.

இப்போது, நான்காவது முறையாக நகல் சட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இப்போதைய புதிய அரசியல் நிர்ணய சபை மூன்று திங்களுக்கு முன் நிறுவப்பட்டபோது, அதன் சாதனைகள் மகத்தானவையாயிருக்கும் என்று கூறப்பட்டது. அப்போது, வேறு வகைகளால் அந்த அரசியல் நிர்ணய சபை மகத்தானது என்று கருதப்படுவதற்குத் தெளிவான சான்றுகள் இல்லாமற் போனாலும், இப்போது தன் முன் தாக்கல் செய்யப்பட்டுள்ள அரசியல் சட்டமேனும், தேவைப்படும் அல்லது அவசியம் என பாகிஸ்தான் மக்கள் கருதக்கூடிய திருத்தங்களுடன் நிறைவேற வழி செய்யுமாளுல் புதிய அரசியல் நிர்ணய சபை மகத்தான பணி புரிந்துள்ளதாகக் கூறிக்கொள்ள முடியும்.

ஏனெனில், பாகிஸ்தான் அமைந்த கடந்த எட்டரை ஆண்டுக் காலமாக, நிலையான ஒரு நல்ல ஆட்சியும், அமைதியான சூழ்நிலையும் நிலவுவதற்கு வழியே இல்லாமல் இருந்து வந்திருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் பாகிஸ்தானில் நிகழ்ந்துள்ள அரசியல் மாற்றங்கள், அதனுல் உருவாகி வருகிற சில விரும்பத்தகாத சூழ்நிலைகள் இவை எல்லாம், பாகிஸ்தான் மக்களுக்கு எதிர்காலத்தில் நல்ல நம்பிக்கையூட்டக்கூடியனவாக அமையவில்லை. சில சில நேரங்களில், பாகிஸ்தான் அரசியல் தலைவர்களின் போக்கு, பாகிஸ்தான் அமைவதை துவக்க முதலே எதிர்த்துவந்த சிலரின் கேலிப் பேச்சிற்கு சாக்காக அமைவதாயிருந்தன. அப்போதெல்லாம், பாகிஸ்தான் மக்களுக்கு நிலையான நல்லாட்சி கிடைக்க வேண்டுமே என்று, இந்த இந்தியத் துணைக் கண்டத்தில் அதிகமாகக் கவலைப்பட்டவர்கள் நாம்தான்.

பாகிஸ்தானுக்காக இப்போது தயாரிக்கப்பட்டுள்ள நகல் அரசியல் சட்டம் 'நாகரீகமானது' என்று கருதப்படுவதற்குத் தேவையான அம்சங்கள் சிலவற்றைக் கொண்டிருப்பதை பாகிஸ்தான் மக்கள் பாராட்டவே செய்வர். அந்த நகல் அரசியல் சட்டத்தின் பல்வேறு அம்சங்களையும், பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபை விவாதித்தபின் விரிவாக எழுதுவோம்.

அதற்கிடையில், இந்த நான்காவது முயற்சியின்போது, நாட்டில் ஏற்பட்டுள்ள அதிகக் கசப்பில்லாத சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு பாகிஸ்தான் அரசியல்வாதிகள், பாகிஸ்தானின் எதிர்கால அரசியல் அமைப்பை நிர்ணயித்தாக வேண்டும். இப்போது உலகில் பலரும் அதிகமாக எதிர்பார்ப்பது, பாகிஸ்தான் எப்படிப்பட்ட அரசியல் அமைப்பை ஏற்றுக் கொள்ளப் போகிறது—அதன் அம்சங்களின் தராதரம் என்ன—என்பதல்ல; மாருக, ஒரு நிலையான ஆட்சியை மட்டுமேனும் மக்களுக்குப் பெற்றுத் தரக்கூடிய அரசியல் அமைப்பு ஏற்பட்டால் அதுவே போதும் என்பதைத்தான்!

பாகிஸ்தான் மக்களும், அதைத்தான் எதிர்பார்க்கின்றனர்—கடந்த எட்டரை ஆண்டுக் கால அனுபவங்களைக் கணக்கிட்ட பின்னர்!

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு ரூ. 3 கோடி

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்திற்காக ரூ. 3 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது

பல மாநிலங்களும் இதற்காக ஒரு கோடி ரூபாய்வரையில் ஒதுக்கியுள்ளன.

கிராமப்புறங்களில் குடும்பக் கட்டுப்பாடு நிலையங்கள் அமைப்பதற்காக மத்திய சர்க்கார், தற்காலிகமாக ஒன்றரைக் கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதாம்

(1-ம் கலத்தின் தொடர்ச்சி)

கஷ்டங்களைவிட, இந்தி பேசும் வடநாட்டவருக்கு சமஸ்கிருதத்தைக் கற்றுக்கொள்வதில் கஷ்டங்கள் குறைவு; அநுகூலமானது,'' என்றும் ஆச்சாரியார் கருத்தறிவித்தாராம்.

நிபந்தனையுடன் அமெரிக்க உதவி

இந்திய சர்க்கார் ஏற்க மறுப்பு

புதுடில்லி, ஜன 9—

இந்தியாவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு ஒரு நிபந்தனையுடன் அமெரிக்கா ஒரு இலட்சம் டன் கோதுமை தர முன்வந்ததை ஏற்றுக்கொள்ள இந்தியப் பேரரசு மறுத்துவிட்டதாகத் தெரியவருகிறது.

'நன்கொடை வழங்கும் அமெரிக்கா, கோதுமை விநியோகிக்கப்படுவதைப் பார்வையிடும்' என்பதே அந்த நிபந்தனையாம்.

'இது, இந்தியாவின் கௌரவத்திற்கு உகந்தது அல்ல' என்று இந்திய சர்க்கார் கருதுகிறதாம்!

எதிர்ப்பு ஏற்பட்டாலும் இணங்கமாட்டார்கள்!

வாஷிங்டன், ஜன 10—

வரும் மே திங்களில், மீண்டும் ஹைட்ரஜன் குண்டு போன்ற அணு ஆயுத பரிசோதனைகளை பசிபிக்கில் அமெரிக்கா நடத்தும் என்று தெரியவருகிறது.

இம்முறை சோதிக்கப்படும் குண்டுகள், இதுவரை சோதிக்கப்படாத, அழிவாற்றல் மிகுந்த குண்டுகளாக இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

இம்மாதிரி சோதனைகள் நடத்தக்கூடாதென — எதிர்பார்க்கிறபடி ஆசிய நாடுகள் கடுமையான எதிர்ப்புக் காட்டினலும் அதனைப் பொருட்படுத்தாமலேயே அமெரிக்கா இந்த சோதனைகளை மேற்கொள்ளும் என்றும் கூறப்படுகிறது.

'தென்னுட்டில் தொழிற் திட்டங்கள் வேண்டும்'

'வடக்கு மட்டும் வளருவது சீரான பொருளாதார வளர்ச்சியாகாது'

'நவ இந்தியா' இடித்துரை

கோவையிலிருந்து வெளிவரும் 'நவ இந்தியா' என்ற தின இதழ், உள்ளூர் 9—1—56-ந் தேதி வெளியீட்டில் 'இரண்டு நல்ல யோசனைகள்' என்று தலைப்பிட்டு எழுதியிருக்கும் தலையங்கத்தின் ஒரு பகுதியை இங்கு தருகிறோம்:—

"...........சர்க்கார் ஆதரவில் எங்கெங்கு தொழில்களைத் துவக்குவது என்பதுபற்றி தேசீய அபிவிருத்திக் கவுன்சிலின் நிரந்தரக் கமிட்டி தனது அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கிறது. நாடு முழுதும் ஒரே சீராகப் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட வேண்டியது அவசியம். ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் தொழில்கள் குவிந்திருப்பதும், இன்னும் சில இடங்களில் தொழில்களே இல்லாதிருப்பது, கட்டுக்கோப்பான பொருளாதார முன்னேற்றத்துக்கு அறிகுறியல்ல. தொழில்களைத் துவக்குவதில், இயற்கை வசதிகளைக் கவனிப்பது அவசியமாயினும், அதே சமயத்தில் மக்கள் வாழ்க்கை நிலையையும் கவனிக்க வேண்டும். இதன் அவசியத்தை கமிட்டி ஏற்றுக் கொண்டிருப்பது பாராட்டற்குரியது.

"தென்னடு சம்பந்தப்பட்டவரை இங்கு ஜனத் தொகை அதிகம்; ஆனல் தொழில் வசதிகள் குறைவு. முதலாவது ஐந்து வருடத் திட்டத்தின்கீழ் துவக்கப்பட்ட பெரிய திட்டங்கள் அநேகமாக வடநாட்டில்தான் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தென்னுட்டில் — குறிப்பாக சென்னை, ஆந்திர ராஜ்யங்களில் கனரகத் தொழில் என்று சொல்லக்கூடியது ஒன்றுமேயில்லை. இங்குள்ள ஜனங்களில் மிகப் பெரும்பான்மையினர் விவசாயத்தையே நம்பி வாழ்கின்றனர். அதிலும் தேவைக்கு மேல் அதிகம் நபர்கள் ஈடுபட்டிருப்பதால், பொதுவாக அனைவருக்கும் வருமானம் குறைவு, புயல், வெள்ளம் போன்ற இயற்கைக் கொடுமைகள் விவசாயிகளை மேலும் அதிக கஷ்டநஷ்டங்களுக்கு உள்ளாக்குகின்றன. ஆகையால், இங்கு விவசாயத் தொழிலின் பளுவைக் குறைக்கவும், ஜனங்களுக்கு அதிக வருமானம் கிடைக்கவும் பல புதிய தொழில்கள் இன்றியமையாதவை. இது விஷயத்தில் வட இந்திய ராஜ்யங்களைக் காட்டிலும், இவற்றுக்குப் பிரத்தியேக சலுகையளிக்க நியாயமான காரணமுண்டு.

"சர்க்கார் ஆரம்பிக்க உத்தேசித்திருக்கும் கனரகத் தொழில்களில் சிலவற்றை தட்சிண ராஜ்யங்களில் துவங்குவது அத்தியாவசியம். அவர்களது ஆலோசனையிலிருந்து வரும் மின்சார உபகரண உற்பத்திச்சாலையையும், அலுமினியத் தொழிற்சாலையையும், இரும்புத் தொழிற்சாலையையும் சென்னை ராஜ்யத்தில் துவக்கலாம். இவற்றுக்கான இயற்கை வசதிகளும், சௌகர்யங்களும் இங்கே இருக்கின்றன.

"ஏனைய ராஜ்யங்களை காட்டிலும், சென்னை ராஜ்யம் மின்சார உற்பத்தியிலும், உபயோகத்திலும் முன்னணியில் நிற்கிறது. இரண்டாவது திட்டத்திலும் பல மின்சார உற்பத்தித் திட்டங்கள் இடம் பெற்றுள்ளன. எதிர்காலத்தில் இங்கு மின்சார உபகரணங்களுக்கு மிகுந்த கிராக்கி ஏற்படுவது உறுதி. ஆகையால் உத்தேசத் தொழிற்சாலையை சென்னை ராஜ்யத்தில் நிறுவுவதுதான் பொருத்தமானது.

இரும்பு, அலுமினியத் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மூலப்பொருள்கள் சேலத்தில் இருக்கின்றன; இவற்றையல்லாமல், சில மத்திய தரத் தொழில்களையும் சென்னை ராஜ்யத்தில் துவக்க சர்க்கார் முன்வர வேண்டும். அப்போதுதான் இங்குள்ள வறுமையையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஓரளவுக்கேனும் வெற்றிகரமாகச் சமாளிக்க முடியும். சர்க்கார் தமது திட்டங்களை வகுப்பதில், இந்த யோசனைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பார்கள் என்றே நம்புகிறோம்.

இந்தியைக் கட்டாயப் பாடமாக்குமாறு விஷமம்

இந்திக்குப் பதில் சமஸ்கிருதத்தை ஆட்சி மொழியாக்க சிபாரிசு

அதேமூச்சில் ஆங்கிலத்தின் இன்றியமையாமை குறித்தும் ஆச்சாரியார் அளப்பு

சென்னை, ஜன. 9—

"இந்திக்கு என்னதான் முக்கியத்துவம் தந்தாலும், இன்று நாட்டில் கற்றவர் அனைவரும் பேசவும், எழுதவும் தெரிந்திருக்கிற ஆங்கிலத்தை நாம் புறக்கணித்துவிடக்கூடாது.

"அமெரிக்காவிலும் காமன்வெல்த் நாடுகளிலுமிருப்பதைப் போன்றே ஆங்கிலமே தொடர்ந்து இந்திய சர்க்காரின் அலுவல் மொழியாக இருக்க வேண்டும்.

"இந்தியை அலுவல் மொழியாக்குவதற்கென அரசியல் சட்டத்தில் ஒரு காலவரையறை நிர்ணயித்தது தவருன ஒன்ருகும்.

"நாம் இன்று ஆங்கிலத்தில் எவ்வளவு திறமை பெற்றிருக்கிருேமோ அவ்வளவு திறமை, இந்தியிலும், நம்மில் எல்லோரும் பெற்ற பின்புதான் இந்தி அலுவல் மொழியாக்கப்பட வேண்டும். அதற்கொப்ப அரசியல் சட்டம் திருத்தப்படவேண்டும். அதாவது, எல்லா இடைநிலைக் கல்வி (செகண்டரி) நிலையங்களிலும், இந்தியைக் கட்டாய பாடமாக்கிய 20 ஆண்டுகளுக்குப் பிறகு—இந்தி மொழியிலும் போதுமான அளவு எல்லோரும் திறமை பெற்ற பிறகு அதனை ஆட்சி மொழியாக்குவதுதான் திருப்திகரமான சரியான வழியாகும்"

—என்று, ஆட்சி மொழிக் குழுவினரிடம் அன்பர் ஆச்சாரியார் கருத்தறிவித்திருக்கிருர்.

"ஆங்கிலம் ஒரு அவமானச் சின்னமாக இருக்கவில்லை. நாம் சர்வதேச அரங்கில் சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து ஆங்கிலத்தை உபயோகித்துவருவதினுல் நமது தன்மானத்தையோ, கௌரவத்தையோ இழந்துவிட்டதாகக் கூற முடியாது. உலக நிறுவனங்களில் நாம் பலமுள்ளவர்களாக விளங்குவதற்கு நமது ஆங்கில மொழித் திறம்தான் பயன்பட்டிருக்கிறது. எனவே, ஆங்கிலத்தை ஒதுக்குவது கூடாது,''

என்றும் அவர் குறிப்பிட்டாராம்

'ஆங்கிலம் நீடிப்பதால் நமது கௌரவம் பாதிக்கப்படும் என்பது தவறு. நாம் சமஸ்கிருதத்தை (சவ மொழியை) ஆட்சி மொழி ஆக்குவதில் வெற்றி பெற்ருல்தான், நமது உண்மையான கௌரவம் காப்பாற்றப்பட முடியும். இந்தியை ஆட்சி மொழியாக்குவதில் வெற்றிபெற முடியும் என்ருல், சமஸ்கிருதத்தையும் நாம் இந்தியாவின் ஆட்சி மொழியாக்க முடியும். அம்மாதிரி செய்வது, ஆட்சி மொழி அமைக்கும் முயற்சியில் பாரபட்சமற்ற தன்மைக்கு எடுத்துக்காட்டாகவும் விளங்கும்.

"ஆங்கிலத்திற்குப் பதில் இந்தியைக் கற்றுக்கொள்வதில் தென்னுட்டவருக்கு இருக்கும்

(2-ம் கலம் பார்க்க)

ஆரணி புயல் நிவாரண நிதியளிப்பு சிறப்புக் கூட்டத்தில் அண்ணா

கழகத் தோழர்களின் சீரிய முயற்சி

ஆரணி நகர் தி மு க. செயற்குழுவின் தீர்மானப்படி, செயற்குழு உறுப்பினர் தோழர் எஸ் கிருட்டிணன் அவர்கள் 4, 5–1–56 தேதிகளில் புலிவேடம் தாங்கி, இயக்கத் தோழர்களுடன் நகர தெருக்களில் ஆடி, புயல் நிவாரணத்திற்கென நிதி சேர்த்தார். ஆரணி நகர தி மு. க. இயக்கத்தின் வரலாற்றிலேயே முதன் முறையாக மக்கள் கட்டணம் அளித்து அண்ணா அவர்களின் சொற்பொழிவைக் கேட்க நேஷனல் டாக்கீசில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

7—1—56 சனிக்கிழமையன்று காலை 9 மணி அளவில், தோழர் போளூர் சுப்பிரமணியம் தலைமையில் தோழர் ப உ. சண்முகம் பேசிய பின் அண்ணா அவர்களிடம் ஆரணி தி. மு. கழகச் சார்பில் ரூ 301-ம், புதிய துணிகள் 28-ம், பழைய உடைகள் 3-ம் அளிக்கப் பட்டது.

இளைஞர் கழகம் ரூ. 1—9—3; கிருஷ்ணா சில்க் பேக்டரி தொழிலாளர்கள் ரூ. 18—3—3; மற்றும் தொழிலாளர்கள், மக்களும் ரூ 20; தோழர் ஒருவர் ரூ 1; சேவூர் தேன்மொழி புத்தக நிலையத்தார் 25 பாட்டு புத்தகங்களும், புயல் நிவாரண உதவி நிதிக்கென அண்ணா அவர்களிடம் அளித்தனர்

அண்ணா அவர்கள், புயல் நிவாரண உதவியில் 'நாம்' எவ்வளவு மிகுந்த கவனஞ் செலுத்துகிறோம் என்பதுபற்றி பேசினார்.

கீரனூர் தி. மு. கழகத் தோழர்கள் வசூல்

இவ்வூர் தி. மு கழகச் சார்பில், கழகத் தோழர்கள் ரூ. 40-ம்; துணி உருப்படி 30-ம் திரட்டினர்.

குன்றத்தூர் தி. மு. கழகத் தோழர்கள் முயற்சி

1—1—56ல், குன்றத்தூர் (செங்கல்பட்டு மாவட்டம்) தி மு கழகத் தோழர்கள் பொதுமக்களிடம் பணமாகவும், அரிசியாகவும் வசூலித்ததை ரூ 150க்கு 30 புதிய சேலைகளையும், 50 பழைய துணிகளையும் புயல் நிவாரணத்திற்கு அனுப்பிவைத்தனர்.

கூடலூர் தி. மு. கழகத் தோழர்கள் உண்டி வசூல்

1—1—56ல் தோழர் எம் ஐ. எம். அனீப் தலைமையில் நடைபெற்ற தி. மு கழகப் பொதுக் கூட்டத்தில் தோழர் கி மனோகரன் சொற்பொழிவாற்றினார். அதுபோது, கூட்டத்தில், உண்டியல் மூலம் புயல் நிவாரண நிதிக்கென ரூ. 11—10—0 கழகத் தோழர்கள் வசூலித்தனர்.

சென்னை திருவள்ளுவர் முன்னணிக் கழகம்

5-வது வட்ட திருவள்ளுவர் முன்னணிக் கழகச் சார்பில் புயல் நிவாரணத்துக்காக ரூ. 9—2—3; 8 படி 2 ஆழாக்கு அரிசி, 361-துணி உருப்படிகள் திரட்டினர்.

தூய ஊ. பு. அ. சௌந்திர பாண்டியனார் நினைவு படிப்பகம்

இப்படிப்பகத் தோழர்கள் ரூ 101—2—9; புதிய — பழைய துணிகள் 973; 49 படி அரிசி வசூலித்தனர்.

ஃ ஃ ஃ

முன்னாள் 19-வது வட்ட நகர சபை உறுப்பினர் சோமசுந்தரம் அவர்கள் ரூ 20—3—3; 8 படி அரிசி; 59 துணிகள் வசூலித்தார்.

கழகத் தோழர்களின் கைத்தறி விற்பனை

சென்னை 14-வது வட்ட தி. மு. கழகத் தோழர்கள் 8—1—56 அன்று, பொங்கல் விழாவை யொட்டி, ரூ. 500-க்கு கைத்தறித் துணிகளை வீதிகள் தோறும் விற்றனர்.

தலைமை நிலையத்தில் தையற் பணி புரிவோர்

புயல் நிவாரணத்திற்கு அளிக்கப்பட்ட பழந்துணிகளைச் செம்மையுறத் தைத்துச் செப்பனிடும் பணியைச் செய்ய முன்வந்துள்ள தையற்கலை வல்லுநர்கள் :—

தோழர் கே. எஸ். கணேசன்,
52, ஜி. என். செட்டி ரோடு,
தியாகராயநகர், சென்னை-17

* * *

தோழர் என். எஸ். சண்முகம்,
1/12-ஏ, கிராம தெரு,
நுங்கம்பாக்கம், சென்னை—6

* * *

தோழர் எம். ஜி. துரை,
109, சோடம்பாக்கம் பெரிய சாலை, சென்னை-6.

* * *

தோழர் ஆர். எல். நாதன்,
ஆந்திரா மினரல்ஸ்,
52 ஜி என். செட்டி ரோடு,
தியாகராயநகர் சென்னை-17.

மூடிய ஆலை திறக்கப்பட்டது!

சென்னை, ஜன. 9—

மைசூர் பிரீமியர் மெடல் தொழிற்சாலையின் 'ரோலிங்' ஆலை கடந்த மூன்றரை மாத காலமாக முதலாளியின் சட்ட விரோதமான செயலால் மூடப்பட்டிருந்தது. அதனால் வேலை இழந்த தொழிலாளர்கள், மறியல், உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டதின் பயனாக தொழிற்சாலை கடந்த 6-ம் தேதியன்று திறக்கப்பட்டு தொழிலாளர்கள் அனைவரும் வேலைக்குச் சென்றனர்.

பாங்கி ஊழியர் வேலை நிறுத்தம்

காரணம் இன்னும் சர்க்காருக்குத் தெரியாதாம்

தகராறை தொழில் நீதிமன்றத்திற்கு அனுப்பத் தயாராம்

புதுடில்லி, ஜன. 9—

தங்கள் சம்பளத்தில் 'வெட்டு' செய்வதாக பாங்கி ஊழியர்கள் இந்திய சர்க்காரிடம் புகார் செய்வார்களானால், இந்திய சர்க்கார், தகராறினை, தொழிலாளர் அப்பீல் நீதிமன்ற விசாரணைக்கு அனுப்பி வைக்கத் தயாராக இருப்பதாகக் கூறப்படுகிறது.

கடந்த வெள்ளி, சனி இரு நாட்களிலும் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டது : வருந்துவதற்குரியது — தேவை இல்லாதது என்று சர்க்கார் கருதுகிறதாம்!

பாங்கி ஊழியர் சங்கம் இந்திய சர்க்காருக்கு இன்னும் தங்கள் வேலை நிறுத்தத்திற்கான காரணத்தைத் தெரிவிக்கவில்லையாம்!

★

பாங்கி ஊழியர்கள் வேலைக்குத் திரும்பினர்

புதுடில்லி ஜன. 9—

தங்கள் சம்பளத்தை 'வெட்டு' செய்வதை எதிர்த்து இரண்டு நாட்கள் வேலை நிறுத்தப் போராட்டம் செய்த பின்பு, ஊழியர்கள் இன்று மீண்டும் வேலைக்குச் சென்றார்கள்.

அவர்கள் வேலைக்குத் திரும்பியதை ஒட்டி சம்பவங்கள் எதுவும் நிகழவில்லை.

இரண்டு நாட்களிலும் இந்திய முழுமையிலுமாக, 40,000 பாங்கி ஊழியர்கள் போராட்டத்தில் கலந்துகொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

10 இலட்சம் தோட்டத் தொழிலாளருக்கு 'போனஸ்'

புதுடில்லி, ஜன. 8—

சுமார் 10 இலட்சம் தோட்டத் தொழிலாளர்களுக்குப் 'போனஸ்' கிடைப்பதற்கான மிகப் பெரிய தோர் ஏற்பாடு, இன்று, தோட்ட முதலாளிகள்-தொழிலாளர் ஆகியோரிடை தொழில்வர்த்தக மந்திரி சபை அலுவலகத்தில் வகுக்கப்பட்டிருக்கிறதெனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 5 திங்களாக இதுபற்றித் தகராறு இருந்துவந்தது.

தேயிலை, காப்பி, ரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் இதுவரையில் இப்படி ஒரு பொது விதத்தில் 'போனஸ்' பெற்றது கிடையாது இப்போது சுமார் 10 இலட்சம் தொழிலாளர்களுக்கு ரூ. 6 கோடிவரை 'போனஸ்' தரப்படவிருக்கிறது.

1953, 1954-ம் ஆண்டுகளுக்கு அசாம், துார் தோட்டத் தொழிலாளர்களுக்கு ரூ. 130 என்றும், அந்த விகிதத்தில் இதர பகுதிகளுக்கு இலாபத்தைப் பொறுத்து 'போனஸ்' நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதென்றும் கூறப்பட்டிருக்கிறது.

1955—56-ம் ஆண்டிற்கான ஏற்பாடும் வகுக்கப்பட்டிருக்கிறது எனத் தெரியவருகிறது.

டாடா தொழில் நிர்வாகம்

தொழிலாளர்களும் பங்கு பெற ஏற்பாடு

பம்பாய், ஜன. 9—

தொழில் நிர்வாகத்தில் பல கட்டங்களில் தொழிலாளர்கள் படிப்படியாகப் பங்கு பெறுவதற்கான ஒப்பந்தம் ஒன்று, டாடா இரும்பு—எஃகு தொழிற்சாலை அதிபர்களுக்கும்—தொழிலாளர்களுக்குமிடையே கையெழுத்தாகியிருப்பதாகத் தெரியவருகிறது.

தொழில் நிர்வாகத்தில் தொழிலாளர்கள் அதிகமாகப் பங்கு பெறுவது விரும்பத்தக்க ஒன்றாகும் என்று ஒப்பந்தம் கூறுகிறதாம்.

இதனால் உற்பத்தி அதிகமாகும் என்றும், தொழில் நிர்வாகம் பற்றி தொழிலாளர்கள் நன்கு புரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும் என்றும் ஒப்பந்தம் தெரிவிக்கிறது.

இந்திய நிலைகளுக்கு இயந்திரக் கலப்பை உகந்ததல்லவாம்!

சென்னை, ஜன. 9—

"இந்தியாவில் ஏராளமான வேலை இல்லாத விவசாயிகள் இருப்பதாலும், மாடுகளும் ஏராளமாக இருப்பதாலும் இயந்திரக் கலப்பை உபயோகிப்பது விரும்பத்தக்கதல்ல,"

என்று, அமெரிக்க எஞ்சினியர் ஆர் சி. ஹே என்பார் கூறியிருக்கிறாராம்.

மலேயா சமரசப் பேச்சுக்கள் தோல்வியுற்றதேன்?

பிரிட்டிஷார்மீது பீகிங் வானொலி குற்றச்சாட்டு

"தங்கள் கைகள் கட்டப்பட்ட நிலையில் மலாயா முதன் மந்திரி தெங்கு அப்துல் ரஹ்மான், கம்யூனிஸ்டு தலைவருடன் பேசச் சென்றதால்தான், சமரச பேச்சு வார்த்தைகள் தோல்வியுற்றன,"

என்று, பீகிங் வானொலி கருத்தறிவித்திருக்கிறதாம்.

"பிரிட்டிஷ் காலனி ஆதிபத்திய வாதிகளின் குறுக்கீடும், நாச வேலைகளினாலும்தான், கம்யூனிஸ்டு தலைவரான சின் பெங்குடன் மலாயா, சிங்கப்பூர் முதன் மந்திரிகள் நடத்திய பேச்சு வார்த்தைகளில் ஒரு உடன்பாடு ஏற்பட முடியாது போயிற்று.

"இன்று மலாயா மக்களின் 'பொது விரோதி' காலனி ஆதிக்கம்தான்; ஏனெனில், மலாயா சுதந்திரத்திற்கும், மலாயாவில் அமைதி நிலவுவதற்கும் தடையாகவுள்ளவர்கள், ஒரு சில காலனி வாதிகள்தான்,"

என்றும், அந்த வானொலி குற்றஞ்சாட்டியுள்ளதாகத் தெரிகிறது.

'வேலை இழந்த கைவண்டித் தொழிலாளருக்கு நிவாரணம் தருக'

முதன் மந்திரியிடம் முறையீடு

சென்னை, ஜன. 9—

கைவண்டித் தொழிலாளர் சங்கத் தலைவரும், செயலாளருமான தோழர்கள் ஏ. இரத்தினம் எம்.எல்.ஏ., எம். சுண்டையா இருவரும், கைவண்டித் தொழிலாளர் நிலைகுறித்து, கோரிக்கை மனு ஒன்றை முதன் மந்திரி காமராசரிடம் கொடுத்தனர் என்று தெரியவருகிறது.

"சென்னை துறைமுக 'டிரஸ்ட்' அதிகாரிகளின் உத்தரவினால் சுமார் 2,000 கைவண்டித் தொழிலாளர்கள் வேலை இழந்து தவிக்கின்றனர். சர்க்கார் இவர்களுக்கு வேறு இடத்தில் வேலை தேடித்தர வழிசெய்ய வேண்டும்; அதற்கிடையில், அவர்களது 'லைசென்ஸ்' ரத்து செய்யப்பட்டிருப்பதைப் புதுப்பித்துத் தரவேண்டும்"

என்று, அந்தக் கோரிக்கை மனுவில் குறிப்பிட்டிருக்கிறார்களாம்.

"மாட்டு வண்டிகள், துறைமுகத்திற்குள் செல்ல அனுமதிக்கப் படுகின்றன; எனவே கைவண்டிகளும் அனுமதிக்கப்பட வேண்டும். கைவண்டித் தொழிலாளர்களின் சிக்கலுக்கு நிவாரணம் கிடைக்காது போகுமானால், நிலைமை கட்டுக்கடங்காது போய்விடும்,"

என்றும் அம்மனுவில் குறிப்பிட்டிருந்தனராம்.

முதன் மந்திரி காமராசர், தான் துறைமுக 'டிரஸ்ட்' தலைவரைச் சந்தித்து, இந்தத் தொழிலாளர்களுக்கு என்ன வழிசெய்வது என்பது குறித்து யோசிப்பதாக உறுதி கூறினாராம்.

திருட்டுத்தனம் செய்த இரயில்வே அதிகாரிகள்

வடநாட்டில் இருவர் தற்காலிகமாக பதவி நீக்கம்

கோரக்பூர், ஜன. 9—

காலியாகச் சென்ற விசேட இரயில் வண்டி ஒன்றில் டிக்கெட் இல்லாத பிரயாணிகள் பலரை இரயில்வே நீதிபதி கண்டுபிடித்ததை ஒட்டி, வடகிழக்கு வட்டார இரயில்வேயைச் சேர்ந்த இரண்டு 'கார்டு'கள் வேலையிலிருந்து தற்காலிகமாக நீக்கிவைக்கப்பட்டிருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

கோரக்பூரிலிருந்து 70 மைல் தொலைவில், போர்ஹனி எனும் இரயில் நிலையத்தில் திடீரென இரயில்வே போலீசாருடன் வண்டியை சோதனை போட்டபோது சுமார் 110 பிரயாணிகள் அந்தத் தனி இரயிலில் இருந்ததாகவும், அவர்களிடத்தில், உரிய கட்டணத்திற்கும் குறைவான பணம் பெற்றுக்கொண்டு வண்டியின் 'கார்டு'கள் அவர்களைப் பிரயாணம் செய்ய அனுமதித்ததாகவும்கண்டுபிடிக்கப் பட்டதாம்.

கல்கத்தா துறைமுகத் தொழிலாளர் முடிவு!

மத்திய சர்க்கார் போக்கு

கல்கத்தா, ஜன. 9—

போர்ச்சுகீசியக் காலனியாக இருக்கும் கோவாவுடன் வர்த்தகத் தொடர்பு கொண்டுள்ள கப்பல்களைப் பகிஷ்கரிப்பதென கல்கத்தா துறைமுகத் தொழிலாளர்கள் முடிவு செய்துள்ளார்களாம்.

சென்ற ஆண்டில் இம்முடிவு செய்யப்பட்டதென்றும், ஆனால், மத்திய சர்க்கார் எதிர்ப்பை ஒட்டி இந்நடவடிக்கை நிறுத்தி வைக்கப்பட்டதென்றும், வெகு காலம் வரையில் மத்திய சர்க்கார் அதன்மீது பொருளாதார நடவடிக்கைகள் எடுக்காததாலேயே இம்முடிவு மேற்கொள்ளப்பட்டதென்றும் கூறப்பட்டுள்ளது.

வடநாட்டு சங்கீதத்தின் இனிமைக் குறைவு

கேஸ்கர் தரும் 'பத்திரம்!'

பம்பாய், ஜன. 8—

"இனிமைக் குறைவா... வடநாட்டு சங்கீதத்தில் மி... தன்ன குழப்பம், தாறுமாறு இவற்றைப் போக்க இந்துஸ்தானி சங்கீதக்காரர்கள் முயற்சிக்கவேண்டும். இதனை. அவர்கள் கர்நாடக (தென்னாட்டு) சங்கீத சபைகளின் சிறிய உதாரணத்தைப் பின்பற்றினால், சிறப்புடன் செய்ய முடியும்"

என்று, டாக்டர் பி. வி கேஸ்கர் (இந்தியப் பேரரசின் தகவல் ஒலிபரப்பு இலாகா மந்திரி) சங்கீத விழா ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

பிரசவ வேதனையை நீக்கும் ரஷ்ய முறை

கிருத்துவ தர்மத்திற்கு மாறுபட்டதல்லவென்கிறார் போப்

வாடிகன் நகர், ஜன 9—

"வலியில்லாமல் குழந்தை பிரசவிப்பதற்கான மனோதத்துவ முறை கிருத்துவ தர்மத்திற்கு விரோதமானதல்ல"

என்று போப்பாண்டவர் அறிவித்திருக்கிறாராம்.

ரஷ்யாவிலும், சீனாவிலும் ஆயிரக்கணக்கானவர்கள் இந்த முறையைக் கையாளுவதாகவும், மேற்கத்திய நாடுகளில் இது உபயோகிக்கப்படுவதில்லை என்றும், கம்யூனிஸ்டு உலகாயதவாதிகள் கண்டுபிடித்தது என்பதால் இதன் மதிப்பு குறைந்துவிடவில்லை என்றும் போப் குறிப்பிட்டாராம்.

ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த சுமார் 700 டாக்டர்களுக்கு பேட்டியளித்தபோதே போப்பாண்டவர் இவ்விதம் குறிப்பிட்டாராம்.

'தாழ்த்தப்பட்டோர் இலாகாவை காமராசரே மேற்கொள்ள வேண்டும்'

தாழ்த்தப்பட்டோர் சங்கக் கோரிக்கை

சென்னை, ஜன. 10 - "தாழ்த்தப்பட்டோர் நல இலாகா பொறுப்பை, முதன் மந்திரி காமராசரே ஏற்றுக் கொண்டால் மிகவும் நல்லது" என்று, சென்னை மாநில தாழ்த்தப்பட்டோர் நலர் சங்கம் கோரியிருப்பதாகத் தெரியவருகிறது

இந்த முடிவு சங்கத்தின் விசேடக் கூட்டம் ஒன்று செயலாளரான வி. ஏ. கிரி என்பார் தலைமையில் நடைபெற்றபோது மேற்கொள்ளப்பட்டதாம்.

அந்தக் கூட்டத்தில், தாழ்த்தப்பட்டோர் பள்ளிகளுக்கு மாநில சமூகநலக் கழகம், தாராளமாக உதவவேண்டும் என்றும், தபால் இலாகாவில் பணிபுரியும் தாழ்த்தப்பட்டோரது குறைகளை மத்திய செய்திப் போக்குவரத்து இலாகா மந்திரியிடம், எடுத்துரைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டதாம்.

இப்போது தாழ்த்தப்பட்டோர் நல இலாகா மந்திரியாக தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பி. பரமேசுவரன் பதவி வகிக்கிறார்.

'பறக்கும் சைக்கிள்'

'பறக்கும் சைக்கிள்' என்ற புதுவிதப்பறக்கும் இயந்திரத்தை அமெரிக்க இராணுவப் படையினர், பரீட்சார்த்தமாக உபயோகித்துப் பார்ப்பதற்கெனத் தயாரித்திருக்கின்றனர் என்றும், இந்த இயந்திரங்கள் இப்போது பன்னிரெண்டுதான் தயாரிக்கப்பட்டிருப்பதாயும் கூறப்படுகிறது

விமானமோட்டும் திறனில்லாத நபர்கள், இந்த 'சைக்கிளை' 20 நிமிடத்தில் ஓட்டக் கற்றுக் கொள்ளலாம் என்றும், இந்த 'சைக்கிள்' 300 ராத்தல் எடையை மணிக்கு 65 மைல் வேகத்தில் தூக்கிச் செல்லும் என்றும், ஒரே சமயத்தில் இது 150 மைல் தூரம் பிரயாணம் செய்யக்கூடியது என்றும் கூறப்படுகிறது

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

ஜன. 13 : சேலம்

14 : காலை—சென்னை புளியந்தோப்பு திருமணம் : மாலை—நேப்பியர் பார்க் பொங்கல் விழா

15 : விருதுநகர்

1956-ம் ஆண்டின் சிறந்த விருந்து

'திராவிடன்'

பொங்கல் மலர்

★

அறிஞர் அண்ணா அவர்கள் தரும் அரியதோர் கருத்துப் படையல்—'குலப்பர் மாறிவிட்டார்!'

★ திராவிடத்தின் முக்கிய எழுத்தாளர்கள் தீட்டியுள்ள கதை—கவிதை—கட்டுரைகள்; இருவண்ணப் படங்கள்!

★ ஓவிய நிபுணர்கள் பாலு சகோதரர்கள் வரைந்துள்ள முகப்பு—கண்கவர் அமைப்பு!

★ கடந்த எட்டு ஆண்டுகளைவிடச் சிறந்த அம்சங்களுடன் வெளிவருகிறது, இவ்வாண்டு மலர்!

104 பக்கங்கள் : விலை ரூபாய் ஒன்று

★

14—1—56 அன்று எல்லா ஊர்களிலும் ('திராவிடன்' விற்பனையாளர்களிடம்) கிடைக்கும்

விவரங்கட்கு: 'திராவிடன்', 16/19 அம்மன் கோயில் தெரு, சென்னை-1

துணிகளின் தர நிர்ணயம்

ஒத்துழைக்க ஆலை முதலாளிகள் மறுப்பு

அவகாசம் தருவதாக மந்திரி டி. டி. கே. அறிவிப்பு

பம்பாய், ஜன. 10— "ஆலைத் துணிகளுக்குப் பஞ்சாலை முதலாளிகள் தாங்களாகவே நல்ல 'தரம்' நிர்ணயித்துக்கொள்ளத் தவறினால், சர்க்கார் கட்டாயமாகத் 'தரம்' நிர்ணயிக்கவேண்டியிருக்கும்" என்று, தொழில் வர்த்தக மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி தெரிவித்திருக்கிறார்.

"தனிப்பட்டவர்களுக்கு உற்பத்திச் சுதந்திரம் உண்டு என்றால், மட்டரகமான சரக்குகளை உற்பத்தி செய்து, மக்கள் தலையில் கட்டலாம் என்று பொருளல்ல" என்றும் அவர் கூறினாராம்.

"தர நிர்ணயக் கழகத்தினர் இந்தியத் துணிகளுக்குத் தரம் நிர்ணயிக்க மேற்கொண்ட முயற்சி தோல்வியுற்றுவிட்டது. பம்பாய் ஆலை முதலாளிகள் சங்கம் ஒத்துழைப்புத் தர மறுத்துவிட்டது. நான் பதவியிலிருந்து விலகுவதற்குள் 'தரம்' நிர்ணயிக்க ஏதாவது செய்தாக வேண்டும். முதலாளிகளுக்கு இன்னும் ஓராண்டுக் கால அவகாசம் தருகிறேன்; பின்பு, சர்க்கார் கெடுபிடி செய்து 'தரம்' நிர்ணயிக்க வேண்டிவரும்; கெடுபிடியோ இல்லையோ—மக்கள் கொடுக்கும் விலைக்கு நல்ல தரமுள்ள பொருட்கள் கிடைக்கவேண்டும்"

என்றும் மந்திரி டி. டி. கே ஜவுளி மாநாடு ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

என்.வி.நடராசன் விளக்கம்

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

ஆனால், இங்குள்ள காங்கிரஸ் தலைவர்கள்—காமராசர் சர்க்கார் அது பற்றி எந்தக் கவலையும் கொண்டதாகத் தெரியவில்லை.

"நேருவைப்போன்ற தலைவர்கள் எல்லாம் வடநாட்டில், 'பம்பாய் நகரம் மராட்டிய மண்டலத்தோடு சேரவேண்டும்' என்று சொல்லும்போது, இந்நாட்டுக் காங்கிரஸ் தலைவர்களின் நிலை எதைப் பற்றியும் அக்கறை கொண்டதாக இல்லை. பஞ்சாப், குஜராத், மராட்டியத் தலைவர்களெல்லாம் இன்றைக்கு காங்கிரசைப் பற்றிக்கூட கவலைப்படவில்லை. அவர்கள் கவலைப்படுவதெல்லாம் அவர்களுடைய நாடு, மொழி, வளம் என்பதைப் பற்றித்தான்! இங்குள்ள காங்கிரஸ் தலைவர்கள் கவலைப்படுவதெல்லாம் பதவி, தேர்தல், எப்படியாவது நுழையக்கூடிய சட்டசபை, நேருவின் 'புன்சிரிப்பு' என்பதைப் பற்றித்தான் என்று தெரிகிறது.

'இப்பொழுது இங்குள்ள காங்கிரஸ்காரர்களுக்கு 'மெட்ராஸ்' மீது மோகம் பிறந்துவிட்டது. அவர்களுக்கு, 'தமிழகம்' என்று பெயர் இருக்கக்கூடாதாம். இந்த மாபெரும் கூட்டத்தின் வாயிலாகக் கூறுகிறேன்—தமிழர்களின் உரிமைக்கு யார் துரோகமிழைக்கிறார்களோ அவர்களுக்குப் பொதுமக்களாகிய நீங்கள் நீதிபதியாக நின்று, அவர்களைக் குற்றவாளிக் கூண்டிலே நிற்கவைத்து நீதி வழங்க வேண்டும். அடுத்த தேர்தலிலே!

"இங்குள்ள அரசியல் கட்சிகள் அனைத்தும் அவர்கள் யாராகயிருந்தாலும் சட்டசபையில் மொழி வழிப் பிரிவினைக்கு துரோகமிழைத்தால் நீங்கள் அவர்களுக்குத் தக்க பாடம் கற்பிக்க வேண்டும்.

"திரு-கொச்சித் தமிழ்ப்பகுதிகளைத் தமிழகத்தில் சுலபமாகச் சேர்க்கவேண்டுமானால், அங்கு ஒரு தேர்தல் வைக்க வேண்டும்; ஒரு மாத தவணைக்குள்ளாக முழுவதிலும் தேர்தல் நடைபெற வேண்டும். 'தமிழ்ப் பகுதிகள் தமிழகத்துடன் சேரவேண்டுமா—வேண்டாமா?' என்று, வாக்கெடுப்பிற்கு விட்டுப் பார்க்கட்டும். பொதுமக்களின் முடிவுப்படி விட்டுவிட நேரு சர்க்கார் தயார்தானா?

"தமிழகப் பகுதிகள் அமைப்புப் பிரச்சினையில் நாம் அனைவரும் ஒற்றுமையுடன் சேர்ந்து தவித்திடும் தமிழ் மக்கள் பகுதிகளை மீட்டிடுவோம். தமிழகப் பகுதிகளைச் சென்னை அரசாங்கமோ, டில்லி மத்திய ஆட்சியோ, காங்கிரஸ் மேலிடமோ தாய்த் தமிழகத்துடன் இணைக்கத் தவறினால் .... அதனால் பெருங் குழப்பமும், கொந்தளிப்பும் தமிழ் நாடு எங்கும் ஏற்படும்."

****

தலைமைக் கழகம் : அறிக்கை—1/56

திராவிடர் திருநாள் கொண்டாடுக!

★

அறுவடை விழாவாகிய பொங்கற் புதுநாள் விழாவைத் திராவிடர் திருநாளாகத் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் கொண்டாடுவார்களாக!

அண்மையில் புனலாலும், புயலாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் மக்களும், பொங்கற் புதுநாளை மகிழ்ச்சியோடு கொண்டாடும்வகையில், அவர்களுக்கு உணவு—உடை—உறையுள் வழங்கும் பணியினையும் திராவிடர் திருநாளைப் பொறுத்து ஏற்படும் கடமைகளில் ஒன்றாகக் கருதும்படி கழகத் தோழர்களையும், பிறரையும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

போட்டிப் பந்தயங்கள் நடத்துதல்—பரிசுகள் வழங்குதல்—வறியோர்க்கு ஈதல்—இயல், இசை, கூத்து அரங்கங்கள் நடத்துதல்—அறிவு விளக்கப் பொதுக் கூட்டங்கள் கூட்டுதல்—மகிழ்ச்சி ஊர்வலங்கள் நடத்துதல் போன்றவைகளில் ஏற்றவைகளை மேற்கொண்டு சீரும் சிறப்பும் பொருந்த கழகக் கிளைகள் கொண்டாடுமாக!

"அறிவகம்"
சென்னை-13
10—1—56

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

****

சென்னையில் திராவிடர்திருநாள்

கிளைக் கழகங்களின் கவனத்திற்கு:

சென்னை — சிந்தாதிரிப்பேட்டை நேப்பியர்பார்க்கில் திராவிடர் திருநாள் கொண்டாட்டத்தின்போது நடைபெற இருக்கும் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ள நினைக்கும் தோழர்கள், கிளைக் கழகச் செயலாளர்களின் உரிமைச் சீட்டுடன், ஒவ்வொரு போட்டிக்கும் எட்டணா கட்டணத் தொகையுடன், இராயபுரம் 'அறிவகத்'தில் 12-ந் தேதி வரை பதிவு செய்து கொள்ளலாம்.

கழகக் கூட்டம்

★

பம்பாய்—மாதுங்கா தி.மு.க. 2-ம் ஆண்டு நிறைவு விழா

15-1-56 மாலை 5-30 மணிக்கு ஜெயின் போர்டிங் ஹாலில்

தலைவர் :
தோ. து. அன்புச்செழியன்

சொற்பொழிவாளர்கள்:
கண்ணதாசன்
இ. எஸ். எஸ். பிச்சையா

* * *

தி.மு.க. உறுப்பினர்களுக்கும் அனுதாபிகளுக்கும்

"மாதுங்கா தி. மு. கழகத்தில் உறுப்பினர்களாகச் சேருபவர்களின் வசதிக்காகக் காலை 7 மணிமுதல் இரவு 9 மணி வரை மாதுங்கா புரூட் மார்க்கெட்டில் உள்ள 'பிளாக் & ரெட் பெர்பியூமரி'ல் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. அங்கு, தோழர்கள் தங்களைப் பதிவு செய்துகொள்ளும்படிக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்," என்று, செயலாளர் தோ. து அன்புச்செழியன் அறிவிக்கிறார்.

ப. உ. சண்முகம்

சுற்றுப் பிரயாணம்

ஜன. 14 : 4 மணி — தண்டராம்பட்டு 'தமிழர் திருநாள்' 7 மணி — திருவண்ணாமலை 'மாடர்ன் கேப்' பொங்கல் விழா

15 : சேலம் — செவ்வாய்ப்பேட்டை

16 : விழுப்புரம்

17 : சென்னை

22 : சித்தூர் (புயல் நிவாரண நிதி)

திராவிடர் திருநாள்

★

குன்னத்தூர்

தேர்த்திடல்

13-1-56 இரவு 8-30 மணிக்கு

தலைவர் :
சே. என். நடராசன்

பேசுவோர்:
சி. என். அண்ணாதுரை
ஈ. வெ. கி. சம்பத்

சேலம் :

13—1—56 மாலை 7 மணிக்கு, சேலம் 19-வது வட்டார தி மு கழக ஆண்டு விழாவும், பொங்கல் விழாவும் சேலம் அம்மாப்பேட்டை மெயின்ரோடு, சாலியர் தெருவில் (சித்தேஸ்வரா டாக்கீஸ் அருகில்) தோழர் கே. ஆர். மாசிலாமணி தலைமையில் நடைபெறும். தோழர்கள் சி. பி சிற்றரசு, வி. சிவப்பிரகாசம், சிற்றுனி - சுப்பிரமணியம், ஈ. ஆர். கிருஷ்ணன், எஸ். ஏ. அன்புக்கரசு ஆகியோர் பேசுவர்.

கீழப்பாவூர் :

தி மு கழகச் சார்பில், 13—1—56 இரவு 8 மணிக்கு, பாண்டியன் மைதானத்தில், தோழர் பி. ஆர். வைகுண்டம் தலைமையில், கீழப்பாவூர் மறுமலர்ச்சி நாடக மன்றத்தார் 'குற்றவாளி' என்ற நாடகத்தை நடத்துவர்.

14—1—56 காலை 8 மணிக்கு நகரின் பல பாகங்களிலும் கொடியேற்றி வைக்கப்படும்.

தாத்தையங்கார் பேட்டை :

தி. மு கழக சார்பில், 13—1—56 மாலை 6 மணிக்குச் சந்தைத் திடலில் அமைந்திருக்கும் பேராசிரியர் இருசயராஜ் அரங்கில் தோழர் பி. சுப்பிரமணியம், எம்.எல்.ஏ தலைமையில் தோழர் க. அன்பழகன் சொற்பொழிவாற்றுவார்.

14—1—56 மாலை 6 மணிக்கு குடந்தை என். ஜி. இராஜன் குழுவினரின் இன்னிசை விருந்து நடைபெறும்.

16—1—56 இரவு 10 மணிக்கு, அழகிரி நாடக மன்றத்தார் நடிக்கும் 'வாழத் தெரிந்தவர்கள்' நாடகம் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ